DHINA BHOOMI 25 SEP 2010




ஈஷா யோகா மையத்தின் சார்பில் பசுமை மதுரை இயக்கம் துவக்கவிழா மற்றும் மஹாசத்சங்கம் பற்றி விழாஒருங்கிணைப்பாளர்கள் ரமேஷ், சுவாமி ஏகா ஆகியோர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தனர்

## ஈஷா யோகா மையத்தின் சார்பில்

# பசுமை மதுரை இயக்கம் துவக்கவிழா மகாசத்சங்கம் நாளை நடக்கிறது

மதுரை,செப்.25-

ஈஷா யோகாமையம் சார்பில் சத்குருஜக்கி வாசுதேவ் நடத்தும் மகாசத்சங்கம் மதுரைதமுக்கம் மைதானத்தில் ,நாளை மாலை 4மணிக்கு நடைபெறுகிறது.இந்த நிகழ்ச்சிக்கு மேயர்தேன்மொழிதலைமை வகிக்கிறார் சிறப்புவிருந்தினர்களாக துணைமேயர் மன்னன்,மாவட்ட கலெக்டர்காமராஜ்,மாநிலவேளாண் விற்பனை வாரிய தலைவர் அலெக்சன்,தமிழ்நாடுதொழில் வர்த்தகசங்க முதுநிலை தலைவர்ரத்தினவேல்,கலைமாமணிமுத்தையா, மதுரா ஆர்ச்சார்ட்(பி) லிட் நிர்வாக இயக்குனர் அருள்பிரராஜன் ஆகியோர்கலந்துகொள்கின்றனர்.இதுகுறித்து நடந்த பத்திரிக்கையாளர்கள் கூட்டத்தில்விழா ஒருங்கிணைப்பாளர்கள் ரமேஷ், சுவாமி ஏகா ஆகியோர் கூறியதாவது,

ஈஷா அறக்கட்டளை நாளைமுதல் தமிழ்நாட்டில்தொடர்ச்சியாக ஆனந்தஅலை எனப்படும் 16 மகாசத்சங்கங்களை நடத்தவுள்ளது.இந்நிகழ்ச்சியின்சார்பாகஇன்று மாரத்தான்போட்டி நடைபெறவுள்ளது. இதில் 500 பள்ளி மாணவர்களும், 500 ஈஷா தியான அன்பர்களும் கலந்து கொள்ளஉள்ளனர். மக்களின் வாழ்க்கையே ஒரு யோகாவாக நடைபெற வேண்டும்.இதற்காகத்தான் ஆனந்தஅலை எனப்படும்மகாசத் சங்கங்களாக நடத்தப்படுகிறது. மதுரை சத்சங்கம் நடக்கும் அன்று மதுரை பசுமை இய க்கமும் தொடங்கப்படவுள்ளது.ஒவ்வொருபசுமை இயக்கத்திலும் ஆயிரக்கணக்கானமரங்கள் நடப்பட்டு பராமரிக்கப்படுகின்றன. இதன்மூலம் பசுமைபுரட்சியை மக்களிடம் ஏற்படுத்த முயற்சி செய்யப்படுகிறது. மேலும்சத்குருவின் அருளுரை,சத்குருவின் தியானங்கள் ஆகியவை நடைபெறுவதுடன் பொது மக்களின் கேள்விகளுக்கும் சத்குருபதி லளிக்கவுள்ளார். இறுதியில் இன்னிசைகச் சேரியும்நடை பெறவுள்ளது என்று தெரிவித்தனர்.